| Publication: The Hindu Tamil | Page No: 04 |
| --- | --- |
| Date: 13-07-2017 | Edition: Chennai |




ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவின்போது மாணவிக்கு பட்டமளிக்கிறார் சென்னை ஐஐடி ஓய்வுபெற்ற பேராசிரியர் முகேஷ் டோபிள்.

# ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி 16-வது பட்டமளிப்பு விழா

- 1,291 மாணவ, மாணவிகள் பட்டம் பெற்றனர்

**சென்னை**

ராஜலட்சுமி பொறியியல் கல்லூரியின் 16-வது பட்டமளிப்பு விழாவில் 1,291 பேர் பட்டம் பெற்றனர்.

கல்லூரி முதல்வர் எஸ்.என். முருகேசன் ஆண்டறிக்கை வாசித்தார். "மொத்தம் 209 குழுக்கள் கலந்துகொண்ட ஸ்மார்ட் இந்தியா ஹெக்கத்தான் 2017 போட்டியில் இக்கல்லூரி மாணவர் குழு பங்கேற்று முதல் பரிசை வென்றதுடன் ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசையும் பெற்றுள்ளது. அதேபோல, 'ஹேக்2ஹெல்ப்' ஹெக்கத்தான் போட்டியில் இக்கல்லூரி 3-ம் ஆண்டு ஐடி மாணவர்கள் பங்கேற்று விவசாயிகள் நன்கொடைக்கான செயலியை உருவாக்கி முதல் பரிசை வென்றனர். மற்றொரு குழு 3-ம் பரிசை வென்றது" என்றார்.

சென்னை ஐஐடி ஓய்வுபெற்ற பேராசிரியர் எம்.எஸ்.சண்முகம் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். டிசிஎஸ் முன்னாள் துணைத் தலைவர் கே.ஜெயராம கிருஷ்ணன், ஹென்கல் இந்தியா முன்னாள் நிர்வாக இயக்குநர் ஏ.சதீஷ் குமார், டிசிஎஸ் சென்னை பிராந்திய மனித ஆற்றல் பிரிவு தலைவர் ராம்குமார் சந்திரசேகரன், சென்னை ஐஐடி ஓய்வுபெற்ற பேராசிரியர் முகேஷ் டோபிள் ஆகியோர் பட்டங்களை வழங்கி உரையாற்றினர்.

மொத்தம் 1,291 மாணவ, மாணவிகள் பட்டங்களை பெற்றனர். இவர்களில் 73 பேர் அண்ணா பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.